1.பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தெரிவு செய்க.

A. அ + யானை =அய்யானை
B. சில+ சில= சிலச்சில
C. பொன்+ தாமரை= பொற்றாமரை
D. மண்+கலம்=மற்கலம்

2. பின்வரும் வாக்கியத்தில் செயப்படுபொருளைத் தெரிவு செய்க. 'மாலதி வீட்டைச் சுத்தமாகக் கூட்டிக் கழுவினாள்'.

A. மாலதி
B. வீட்டை
C. சுத்தமாக
D. கழுவினாள்

3. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களுள் செயப்பாட்டு வினை வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. பாலன் பழம் சாப்பிட்டான்
B. அக்கம்பத்து மக்கள் கூட்டுபணி செய்தனர்.
C. சித்திரம் ஓவியர் சந்திரனால் வரையப்பட்டது.
D. மாணவரை ஆசிரியர் கட்டுரை எழுதும்படி பணித்தார்.

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கு ஏற்ற சரியான இலக்கண விதி யாது?

A. தனிக்குறிலை அடுத்து வல்லின மெய் வரின் வலிமிகும்.
B. உயிரோடு உயிர் சேரும் பொழுது வலிமிகும்.
C. ஓரெழுத்து ஒரு மொழியுடன் வல்லெழுத்து சேர்தல்.
D. ஓரெழுத்து ஒரு மொழியுடன் மெல்லினம் சேர்தல்.

5. கந்தனுக்குப் பணக்கஷ்டம் ________________ அவன் தன் அண்ணனிடமும் அல்லது யாரிடமும் உதவி கேட்கவில்லை.

A. இருப்பினும்
B. ஆகவே
C. ஆகையால்
D. எனினும்

LIVEWORKSHEETS

6. பிழையாக வலிமிகுந்துள்ளதை தெரிவு செய்க.

I. இய்யாழ்
II. தீப்பந்தம்
III. மென்றுத் தின்றான்
IV. கல்தூண்

A. I,ii,iii
B. Iii,iv
C. I,iii,iv
D. Ii,iv

7. கோபாலுக்கு அதிர்ஷ்ட குலுக்கில் ஒரு லட்சம் ரிங்கிட் பரிசு பணம் கிடைத்தது.______________ அவன் அப்பணத்தை முதியோர் இல்லத்திற்கு நன்கொடையாக வழங்கினான்.

A. இருப்பினும் /எனினும்
B. என்றாலும் / அதற்காக
C. ஆனாலும் /மேலும்

8. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியாக வலிமிகுந்து எழுதப்பட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. செல்வந்தர் ஓம்ஸ்.தியாகராஜன் அவர்கள் தாம் சம்பாதித்த அவ்வளவுப் பணத்தையும் அனாதை ஆசிரமத்திற்கு வழங்கினார்.
B. அன்று பெய்த அடை மியினால் வெள்ளம் ஏற்பட்டது.
C. இந்தியர்கள் தைபொங்கல் அன்று வீட்டு வாசலில் பொங்கல் வைப்பர்.
D. "நீ இப்படி கூறுவாய் என்று நான் சிறிதும் எதிர்ப்பார்க்கவில்லை" என்றாள் மாலதி.

LIVEWORKSHEETS

9. அயற்கூற்று வாக்கியத்திற்கு ஏற்ற நேர்க்கூற்று வாக்கியத்தைத் தெரிவு செய்க.

| |
|---|
| மருத்துவமனையில் முதல்நாள் சேர்க்கப்பட்ட தன் நண்பர் குணமடைந்து வருவதாக ரகு கூறினார். |

A. "நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தன் நண்பர் குணமடைந்து வருகிறார்," என்று ரகு கூறினார்.
B. "மருத்துவமனையில் நேற்று சேர்க்கப்பட்ட என் நண்பர் குணமடைந்து விட்டார்," என்று ரகு கூறினார்.
C. "மருத்துவமனையில் மறுநாள் சேர்க்கப்பட்ட என் நண்பர் குணமடைந்து வருகிறார்," என்று ரகு கூறினார்.
D. "மருத்துவமனையில் நேற்று சேர்க்கப்பட்ட என் நண்பர் குனமடைந்து வருகிறார்," என்று ரகு கூறினார்.

10. பிரித்தெழுதுக.

| |
|---|
| திருவருள் |

A. திரு + வருள்
B. திர் + அருள்
C. திரு + அருள்

11. வீட்டினுள் புகுந்த திருடன் அறையின் கதவை ____________ வென்று தட்டினான்.

A. தட தட
B. பளீர் பளீர்
C. மட மட
D. கிடு கிடு

LIVEWORKSHEETS

12.பின்வரும் வாக்கியத்திற்குச் சரியான மரபுத்தொடரைத் தேர்வு செய்க.

| |
|---|
| பரதக் கலையை நன்கு கற்றுத்தேர்ந்த மாலதி சிரந்த நாட்டியத் தாரகை என்று அனைவரின் பாராட்டையும் பெற்றாள். |

A. கை கொடுத்தல்
B. பெயர் பொறித்தல்
C. கரைத்துக் குடித்தல்.
D. கை கூடுதல்.

13. வீரம் மிகுந்த சிங்கத்தை அறிவாற்றலினால் சிறிய முயல் வீழ்த்திய கதையைப் படித்த பொழுது____________________ ஆவான் என்றும் அறிந்து கொண்டேன்.

A. மனம் உண்டானால் மார்க்கம் உண்டு
B. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
C. புத்திமான் பலவான்
D. ஆழம் அறியாமல் காலை விடாதே

14. 'நான், எனது என்ற செருக்குடையவர்களை அவர்களின் விருப்பம் போல் ஆடவிட்டு அரசாள்கிறான்.' மேற்காணும் விளக்கத்தை உணர்த்தும் செய்யுளடி யாது?

A. எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்.
B. கோனாகி யான் எனது என்றவரைக் கூத்தாட்டு
C. நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுகின்ற நடுவே.
D. நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே.

15.பின்வரும் செய்யுளடிகளுக்கேற்ப சரியான வாக்கியத்தைத் தெரிவு செய்க.

| |
|---|
| மன்னர்க் கழகு செங்கோன் முறைமை |

A. நீதியோடு ஆட்சி செய்த மனுநீதிச் சோழனை மக்கல் அனைவரும் போற்றினர்.

LIVEWORKSHEETS

B. ஔவையாரின் தமிழ் மொழித் திறனை அறிந்த மன்னர் அவர் நீண்ட காலம் உயிர் வாழ வேண்டி அவருக்கு நெல்லிக்கனியைப் பரிசாகக் கொடுத்தார்.

C. நீதி தவறிய பாண்டிய மன்னன் செங்கோல் ஆட்சி மேன்மையடைந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

D. மொகலாயப் பேரரசர்களுள் ஒருவரான அக்பர் நீதியோடு ஆட்சி செய்யாததால் அவர் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

| |
|---|
| 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br><br>மெய்ப்பொருள் காண்பதறிவு' |

16.இத்திருக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம் யாது?

A. ஒழுக்கமுடைமை
B. அறிவுடைமை
C. வான்சிறப்பு
D. நீத்தார் பெருமை

17. கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சீர்களைத் தெரிவு செய்க.
மோப்பக் குழையும் அனிச்சம் ________________ , நோக்கக் குழையும் __________

A. பறந்து விரிந்து - சிறந்து
B. முகம்திரிந்து -விருந்து
C. உயர்ந்து - அருந்து
D. தாழ்ந்து -சான்று

18. 'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்.' மேற்காணும் செய்யுளடியில் இஃது பொருட்படுத்தவில்லை.

A. பசி
B. தூக்கம்
C. வாழ்த்து
D. பொறுமை

LIVEWORKSHEETS

19.ஏற்ற பதிலைத் தெரிவு செய்க 'ஒளித்தலும் மறைத்தலும்' என்னும் விளக்கத்தைக் குறிக்கும் இணைமொழி யாது?

A. பேரும் புகழும்
B. ஆதி அந்தம்
C. ஒளிவு மறைவு
D. கல்வி கேள்வி

20.கீழ்க்காணும் பழமொழிக்கு ஏற்ற பொருளைத் தெரிவு செய்க.
நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

A. ஒரு மனிதனின் முக்கியத்துவத்தை அவர் நம்முடன் இருக்கும் போதுதான் அறிய முடியும்.
B. ஒரு மனிதனின் முக்கியத்துவமும் பெருமையும் அவர் இல்லாத போதுதான் உணர முடியும்.
C. ஒரு மனிதனின் சிரப்ப் மற்றொரு மனிதனின் வழியே அறிய முடியும்.
D. ஒரு மனிதனின் சிறப்பை வெளிக்கொணர துன்பப்பட்டால்தான் முடியும்.

LIVEWORKSHEETS